மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Cultural Biographical Records in the Akananuru

Dr. G. Dharmaraj

Assistant Professor, Department of Tamil, Ananda College, Devakottai, India

Manuscript ID : **MT1A0009**

Volume : **1**

Issue : **1**

Month : **September**

Year : **2021**

Received: 22.08.2021

Revised: 27.08.2021

Accepted: 02.09.2021

Published: 05.09.2021

Pages : 100-108

ABSTRACT:

Sangakkalam can be called a golden age in the history of Tamil Nadu. The Sangam literature serves as a source of study for defining the culture of the Tamils by defining the period. The literature of this society greatly contributes to the study of ancient history. Sangam literatures fall into two major categories, internal and external. Internal Literatures Literary Society Internal Literature is the literature that analyzes the internal morals of the ancient Tamils and the way of life in which they lived. One of the Sangam internal literatures is also known as Akananuru 'Nedunthokai'. Contains high-pitched songs as per the title and contains historical data. In that sense, the study summarizes the study of the culture, religious life, and career of the ancient people in the early nineteenth century.

KEYWORDS:

Sangam Literature, Culture, Hospitality, Worship, Fisheries

REFERENCES :

1. N.Devaneya pavanar, Pandaiya tamilar nagarigamum panpadum, Manivasagar Pathippagam, Madurai, 2004.
2. P.V.Somasundharanar, kaliththogai, NCBH, Chennai, 2006.
3. S.Sakthivel, Natuppuraviyal aiu, Sarvothaya Ilakkiyappannai, Madurai, 2003.
4. Thirukkural, Manivasagar Pathippagam, Madurai 2009.

அகநானூற்றில் பண்பாட்டு வாழ்வியல் பதிவுகள்

முனைவர் கோ.தர்மராஜ்,
துறைத்தலைவர்,
தமிழ்த்துறை, ஆனந்தா கல்லூரி, தேவகோட்டை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தமிழக வரலாற்றில் சங்ககாலம் ஒரு பொற்காலம் எனலாம். அக்காலத்தை வரையறுத்து தமிழர்களின் பண்பாட்டியலை வரையறைச் செய்வதற்கான ஆய்வு மூலங்களாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. பழங்கால வரலாற்றினை அறிவதற்கு இச்சங்க இலக்கியங்களே பெரிதும் துணைபுரிகின்றன. சங்க இலக்கியங்கள் அகம், புறம் ஆகிய இருபெரும் பகுப்பில் அடங்கியுள்ளன. அக இலக்கியங்கள் பண்டையத் தமிழர்களின் அகஒழுக்க நெறிப்பாடுகளையும் அவர்கள் வாழ்ந்த வாழ்வியல் நெறிமுறைகளையும் பகுத்துக் காட்டும் இலக்கியங்கள் சங்க அகஇலக்கியம் ஆகும். சங்க அகஇலக்கியங்களுள் ஒன்றான அகநானூறு 'நெடுந்தொகை' எனவும் சிறப்புடையது. இச்சிறப்பு பெயருக்கு ஏற்ப அதிக அடிகளோடு கூடிய பாடல்களைப் பெற்றிருப்பதோடு வரலாற்று ஆய்விற்கான தரவுகளையும் பெற்றிருக்கிறது. அந்த வகையில் அகநானூற்றில் பழங்கால மக்களின் பண்பாடு, சமய வாழ்வுகள், தொழில் முறைகள் போன்றவற்றை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாக அமைகின்றது.

கருச்சொற்கள்

சங்க இலக்கியம், பண்பாடு, விருந்தோம்பல், வழிபாடு

முன்னுரை

புலவர் தத்தம் காலச் சமுதாயச் சூழ்நிலையைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ தத்தமது படைப்புகளில் இணைத்துக் காட்டும் இயல்பினைப் பெற்றிருந்தனர். ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுந்த இலக்கியங்கள் அக்காலத்தின் வாழ்வியல் நடைமுறைகள் அனைத்தையும் அறிய உதவும் கருவியாகப் பிரதிபலிக்கின்றது. இலக்கியங்கள்வெறும் பொழுதுபோக்குப் படைப்பல்ல. புலவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் மக்களிடையே பயன்படுத்தப்பட்டு வந்த வாழ்வியல் பண்பாட்டு நெறிகளை தனது இலக்கியங்களின் வழியே புலப்படுத்தியுள்ளனர். அந்த வகையில் சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூற்றில் காணலாகும் பண்பாட்டுப் பதிவுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பண்பாடு

பண்பாடு மனித சமுதாயத்தின் அங்கம் என்ற நிலையில் அறிவு, நம்பிக்கை, அறத்தன்மை, ஒழுக்கம், பழக்க வழக்கம் போன்ற பல தன்மைகளைக் கொண்ட வாழ்க்கை முறையே பண்பாடாகும் என்று ஈ.பி.டெய்லர் என்ற மேல்நாட்டு அறிஞர் கூறுகிறார். பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்பு உடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. **“பண்படுவது பண்பாடு. பண்படுத்துதல் சீர்படுத்துதல் அல்லது திருந்துதல், திருந்திய நிலத்தைப் பண்பட்ட நிலம் அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும் திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளம் என்றும் சொல்வது வழக்கம்”** [1] என்று தேவநேயப்பாவாணர் குறிப்பிடுகின்றார்.

“பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்” [2]

என்று கலித்தொகை கூறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது ஆகும். இதனை மேலும்,

“அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்இரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு” [3]

எனும் திருக்குறளில் வள்ளுவர் கூறியுள்ளர். **“ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்திருக்கும் சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் கொண்டிருக்கம் நிலையே பண்பாடு”** [4] என்று மத்யூ ஆர்னால்டு கூறியுள்ளதை அறியமுடிகின்றது.

விருந்தோம்பல்

ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் விருந்தோம்பல் பண்பினைக் கொண்டிருந்ததை சங்க இலக்கியங்களில் அறியமுடிகின்றது. பசித்து வந்தோருக்கு உணவு படைத்தலைச் சிறந்த பண்பாகக் கொண்டனர். விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாடுகளுள் மிக முக்கியமான ஒன்று. விருந்தோம்பல் என்னும் பண்பு அன்றுதொட்டு இன்று வரை தமிழரிடையே இருந்து வருகிறது. ‘விருந்து’ என்னும் சொல் புதியவர், அதிதி என்ற பொருளில் வழங்கப்பட்டு வந்தது. அக்காலக் கட்டத்தில் ஓர் ஊரில் இருந்து மற்றொரு ஊருக்குச் செல்லநேர்ந்தால் வழியில் தென்படும் ஊரில் அமைந்துள்ள வீடுகளில் உணவு உண்டு, நீர்பருகி அங்குத் தங்கிச் செல்வர். இத்தன்மையினோரைக் குறிப்பது விருந்தாகும். **“விருந்தினரென்பார், முன்பின் அறியாதவராய்ப் பசித்து வரும் இல்லற நிலையினர்.இவர்தம் மேற்கொண்டதொரு நாற்றொழிலை முன்னிட்டு ஊர் விட்டு ஊர் செல்பவர். செல்லுமிடங்களில் இடத்தாலும், காலத்தாலும் பிற வசதிகள் குறைவாலும் உணவு முதலியவற்றைத்**

தாமே ஏற்பாடு செய்துகொள்ளல் ஏலாதாயின, ஆங்கவர் பிறர் உதவியை நாடி நிற்பர். அஞ்ஞான்று அவரைத் தமதில்லத்திற்கு விருந்தாக ஏற்றுக்கொண்டு அவர்க்கு உண்டி முதலியன உதவுதல் இல்வாழ்வர் கடமை” [5] என்று அ.பாலசுந்திரன் கூறுகின்றதை அறியமுடிகின்றது. மேலும் இதனை அகநானூற்றில்,

“மனைக் கொண்டு புக்கனன் நெடுந்தொகை

பற்றனள் திருந்திழையோளே”

அகம்.பா.384:13-14.

எனும் பாடலடியில் மன்னனுக்கு உற்றுழி உதவும் பொருட்டு தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். போரில் வெற்றி பெற்றவுடன் தலைவியைக் காணவிரைந்து மீள நினைத்தான். காற்றின் வேகத்தை விட, மனதின் வேகத்தை விட விரைவாய்த் தேரை ஒட்டிய பாகனைப் பாராட்டி வீட்டின் உள்ளே உடன் அழைத்துச்சென்றனர். தலைவியோ அவன் வரவால் உள்ளம் மகிழ்ந்து விருந்தோம்பும் சிறப்பினைப் பெற்றால் என்பதை இப்பாடல் புலப்படுத்துகிறது.

“விருந்தும் பெறுகுநள் பொலும் திருந்திழைத்

துடமென் பணைத்தோள் மடமொழி யரிவை”

அகம்.பா.324:1-2.

எனும் பாடலில் தலைவியைப் பிரிந்து வினைமேற்சென்றான். அவ்வினை முடிந்து மீண்டும் செல்வதற்கு முயன்றான். மென்மை வாய்ந்த பெருத்த தோள்களையும், மடப்பத்தை உடைய மொழியினையும் கொண்ட தலைவி இன்று தலைவனுக்கு விருந்து செய்யும் பேற்றினைப் பெற்றாள் எனப் பிறர் கூறுவதை இப்பாடலின் வாயிலாக அறிய முடிகின்றது.

பருந்து

கூகை, ஆந்தை போன்றவை வீட்டிற்கே வந்துபேரொலி எழுப்பினால் அது நிமித்தத்திற்கான அறிகுறி என்று கருதி அதனை விரட்டுவர். அவை எங்குப் பேரொலி எழுப்புகிறதோ அவ்வீட்டிலோ அல்லது தெருவிலோயாரேனும் இறக்க நேரிடும் என்பது மக்களின் எண்ணமாகும். இதனை,

“உயாவிளி பயிற்றும் யாவுயர் நனந்தலை

உருள்துடி மகுளியின் பொருள்தெரிந் திசைக்கும்

கடுங்குரற் குடிஞைய”

அகம்.பா. 19:3-5

எனும் பாடலடி உணர்த்துகின்றதை அறியமுடிகின்றது.

பல்லி சகுனம்

சகுனம் பார்ப்பது பண்டைய இலக்கியங்களில் மக்கள் அதிகமாக தங்களது வாழ்வில் பயன்படுத்தி வந்துள்ளதை அறியமுடிகின்றது. இதனை அகனானூற்றில்

“ஓங்கிய நல்லில் ஒரு சிறை நிலைஇப்

பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவி”

அகம்.பா. 9: 18-19.

பல்லி இல்லத்தில் ஒலித்த நிலையினை இப்பாடலடி உணர்த்துகின்றது. மேலும் பழங்கொல்லையாகிய மேட்டுநிலத்தில் பெரிய சிவந்த தினைப்பயிர் தழைத்து வளர்ந்திருக்கும். அதன் மேலோக்கி உயர்ந்து வளர்ந்த அபரித தினைக்கதிரைத் தின்னவரும் காட்டுப்பன்றி பல்லி நல்ல பக்கத்தே ஒலிக்கும் நிமித்தம் கேட்டுக்கொல்லையினை அணுகி வரும் என்பதிலிருந்து மனிதர்கள் மட்டுமல்ல விலங்குகளும் நிமித்தம் கேட்பதை இப்பாடல் பதிவு செய்துள்ளதைக் காணமுடிகின்றது.

வழிபாடு

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அச்சம் கொண்ட மனிதன் அதன் சீற்றத்திற்க ஆளாகாமல் இருக்க வழிபட நினைத்தான். ஆதனடிப்படையில் இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோற்றம் பெற்றன. பின்னர் பலிகள் கொடுப்பதன் மூலம் இயற்கையினைத் தன் வயப்படுத்திவிடலாம் என்று நினைத்தான். காலப்போக்கில் இதன் காரணமாகவே இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினான். இவையே பின்னர் மக்களிடையே உருவவழிபாடு தோன்றக்காரணமாக இருந்ததெனலாம். “**இயற்கைத் தோற்றங்களாகிய கதிரவன், மதி, மழை, மின்னல் முதலானப் பொருட்களைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம் என்னும் உள்ளத்து உணர்வுகளே சமயம் தோன்றக் காரணமாயின என்னும் மாகஸ்மில்லரின் கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது**” [6] என்று சு.சக்திவேல் கூறுவது மனங்கொள்ளத்தக்கதாகும்.

"அணங்குடை வரைப்பக்கம் பொலியவந் திறுக்குந்

திருமணி விளக்கின் அலைவாய்ச்

செருமிகு சேஎயொடு உற்ற சூளே"

அகம்.பா. 266:19-21

எனும் பாடலடியின் வழியே பழங்காலந்தொட்டே முருகக் கடவுளுக்கு அலைவாய் எனும் திருச்செந்தூரில் கோயில் இருந்தமையை நன்கு உணரமுடிகின்றது. பசுக்கூட்டத்தைக் கவர்ந்து சென்ற வெட்சி வீரர்கள் கரந்தை வீரர்களை வாள்கொண்டும் அம்புகளை வில்லில் தொடுத்தும் நெடுந்தொலைவு விரட்டி அடித்தனர். பின்னர் தெய்வம் வாழும் வேப்ப மரத்தடியில் கவர்ந்து கொண்டு வந்;த பசுக்களுள் கொழுப்புடைய பசுவினைக்கொன்று அதன் குருதியை மரத்தின் மேல் தெளித்துப்பலியிட்டு அதன் புலாலைச் சமைத்து உண்டனர் என்பது சட்டப்படுகிறது. மனிதன் தன்செயல்களின் நன்மை தீமைகளுக்கு இயற்கையே காரணம் என்று நம்பினான். இந்தநம்பிக்கையின் அடிப்படையில் தான் மரம், மண், கடல், சுனை போன்ற இயற்கைப்பொருளைத் தெய்வமெனக் கருத ஆரம்பித்தான் என்பதனை,

"சூர்முத லிருந்த ஓமையம் புறவின்"

அகம்.பா. 309:4-6.

எனும் பாடலடி உணர்த்துகின்றதை அறியமுடிகின்றது..

புனலாட்டு விழா

புனலாட்டுவிழா சங்ககால மக்களிடையே சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. நீர்த்துறையில் நீர்ப்பெருக்கம் அதிகமாக இருக்கும் போது நீராடி மகிழ்வதை நீர்விழா என்று இலக்கியங்கள் சுட்டுகின்றன. மக்கள் விடியற்காலையில் துயில் எழுந்ததும் ஆறு, குளம், சுனை போன்றவற்றில் நீராடுதலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதனை,

"நெடுநீர்ப் பொய்கைத் துணையொடு புணரும்

மலிநீர் அகல்வயல் யாணர் ஊர

போதார் கூந்தல் நீவெய்யோளொடு

தாதார் காஞ்சித் தண்பொழில் அகல்யாறு"

அகம்.பா. 246: 3-6.

தலைவன் பரத்தையுடன் சோலை சூழ்ந்த ஆற்றினிலே புனலாடினான் என்ற செய்தியை அறியமுடிகிறது. கரிகாலன் தன் சுற்றத்தாருடன் புனலாட்டு விழாவினைக் கண்டுகளித்ததை,

"மலிபுனல் பொருத மருதோங்க படப்பை

ஒலிக்கதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்

கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்

தண்பதங் கொண்டு தவிர்ந்த இன்னிசை

ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரள"

அகம்.பா. 376: 3-7.

எனும் பாடலடிகளின் வழியே புனலாட்டு விழா நிகழ்ந்துள்ளதை உணரமுடிகின்றது.

கூத்தர் விழா

ஆடும் கலைஞர்களை கோடியர் என்று அழைப்பர். விறலியர் மயில் போல அசைந்தாடும்தோயும் கூத்தர் முழவினை முழங்கிக்கொண்டு பின்னே செல்வர் என்பதனை,

"ஆடமயில் முன்னதாகக் கோடியர்

விழா கொள் மூதூர் விறலி பின்றை

முழவன் போல அகப்படத்தழீஇ"

அகம்.பா. 352: 4-6.

எனும் பாடலடிகள் புலப்படுத்துகின்றதை அறியமுடிகின்றது.

உழவுத்தொழில்

தொடக்கக் காலத்தில் உழவு போன்ற இன்றியமையாதத் தொழிலும் கூடபோர்க்களம் புகத் ததகுதியில்லாதவர்க்கே அளிக்கப்பட்டது. இதனையே,

"வேளான் மாந்தர்க்கு உழுதூண் அல்லது

இல் என மொழிப பிறவகை நிகழ்ச்சி" [7]

எனத் தொடக்கக் கால சமுதாயத்தின் நிலையைத் தொல்காப்பியம் உணர்த்துகிறது. அக்காலத்தில் பகைவர்களைப் பணிய வைக்கும் பொருட்டு போர் உத்தியாக வஞ்சி அரசர்களால் உழவு நிலங்கள் பாழ்ப்படுத்தப்பட்டன. அச்சூழலில் உழவின் முக்கியத்துவம் உணரப்பட்டது. அதன்பிறகே அரண்கள் கட்டப்பட்டு உணவுப் பொருளைச் சேமித்து வைக்கும் பழக்கம் ஏற்பட்டது. உழவின் சிறப்பினை,

“உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது

எழுவாரை எல்லாம் பொறுத்து” [8]

என்கிறது திருக்குறள். உழவை விட்டுப் பிற தொழில்களைச் செய்வார்க்கும் உணவு பொருளைத் தந்து தாங்குவதனால், உழுதொழில் செய்வாரே உலகத்தாருக்கு அச்சாணி எனப் புகழப்பட்டனர். விளைந்த நெல்லினை அரிசியாகவும், அவலாகவும் மாற்றி உண்;;டணர் என்பதை,

“பெருஞ்செய நெல்லின் வாங்குகதிர் முறித்துப்

பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை”

அகம்.பா. 141: 17 -18

என்றும் உணர்த்துகிறது. கிடைத்த நெல்லை தன் தேவைக்குப் போக மிஞ்சியவற்றைப் பண்டமாற்று முறையில் மாற்றிப் பிற பொருள்களை வாங்கிச் சமைத்து உண்டனர் என்பதனை உணரமுடிகின்றது.

மீன்பிடித்தொழில்

பரதவர்கள் அதிகாலையிலேயே கடலுக்குச் சென்று மீன்களை வலைவீசிப் பிடித்துக் கொண்டு வந்து கடற்கரை மணற்பரப்பில் காய வைப்பர் என்பதனை,

“நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்

நுணங்குமணல் ஈங்கண் உணங்கப் பெய்ம்மார்”

அகம்.பா. 19:1-2.

எனும் பாடலடிகளின் வழியே பிடித்து வந்த மீன்களைப் பரதவர்கள் தனித்தனியே வகைகளாக அதாவது, மத்திமீன், சுறாமீன், இறால்மீன் எனப் பிரித்துத் தேவையானவற்றை விற்று மற்றதைக் கருவாடாக்க வெயிலில் காயவைப்பர். இன்றைக்கும் கடற்கரைப் பகுதியல் வாழும் மக்கள் இத்தொழிலைச் செய்து வருகின்றனர் என்பது கண்கூடு. இவற்றிலும் தரம் பிரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு

ஏற்றுமதி செய்து வருகின்றனர். இதற்கெனவே சில தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றதைக் காணமுடிகின்றது.

தொகுப்புரை

- பண்பாடு மனித சமுதாயத்தின் அங்கம் என்ற நிலையில் அறிவு, நம்பிக்கை, அறத்தன்மை, ஒழுக்கம், பழக்க வழக்கம் போன்ற மதன்மையான தன்மைகளைக் கொண்டதே பண்பாடு ஆகும்.
- விருந்தோம்பல் எனும் பண்பு அன்று தொட்டு இன்று வரை தமிழரிடையே இருந்து வருகிறது. 'விருந்து' என்னும் சொல் புதியவர், அதிதி என்ற பொருளில் வழங்கப்பட்டு வந்துள்ளது.
- இயற்கையின் ஆற்றலைக் கொண்டு அச்சம் கொண்ட மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்க இயற்கையை வழிபட நினைத்தான். அதனடிப்படையில் இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோற்றம் பெற்றன.
- பண்டையத் தமிழர்கள் கூடித் தெய்வங்களின் பொருட்டுச் செய்யும் சிறப்பே விழாவாகும்.இதனை விழவு, சாறு என்றும் குறிப்பிடுவர். உள்ளிவிழா, பங்குனிவிழா,கார்த்திகை விழா புனலாட்டுவிழா எனப் பல்வேறு விழாக்களைக் கொண்டாடினர்.
- பண்டைய கால மக்கள் உழவுத்தொழில், மீன்பிடித்தொழில் போன்ற தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதையும் அத்தொழிலின் வழியே பண்டமாற்று முறை நடந்தள்ளதையும் அறியமுடிகின்றது.

முடிவுரை

பண்டையத் தமிழர்களின் வாழ்வியல் நெறிகளை சங்க அகஇலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. சங்க அகஇலக்கியங்களுள் ஒன்றான அகநானூற்றில் விருந்தொம்பல் பண்பு, பழங்காலத் தமிழர்களின் வழிபாட்டு முறைகள், புனலாட்டு விழா நிகழ்த்தும் நிலைகள், தொழில் முறைகள் இவற்றின் பாரம்பரிய நிலைகளைப் பண்டையத் தமிழ்மக்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வந்துள்ள பாங்கு முறைகளைக் இக்கட்டுரையின் வழியே காணமுடிந்தது.

அடிக்குறிப்புகள்

1. ஞா. தேவநேயப்பாவானர், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்.5, ப.ஆண்டு. 1996.
2. கலித்தொகை, நியுசெஞ்சுரி பதிப்பகம், பா.138: 8, ப.ஆண்டு. 2007.
3. திருக்குறள், 992, மணிவாசகர் பதிப்பகம், 2009.
4. மத்யூ அர்னால்டு, பண்பாட்டுச் சிந்தனைகள், தமிழ்மண் பதிப்பகம், பக். 5, ப.ஆண்டு. 2004.
5. ந.சஞ்சீவி, கட்டுரைக் களஞ்சியம், காவ்யா வெளியீடு, பக்.503, முதற்பதிப்பு. 2006.
6. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.223.
7. தோல்காப்பியம் மரபியல், நூற்பா எண்.81, பேராசிரியர் உரை, தமிழ்மண் பதிப்பகம், ப.ஆண்டு. 2003
8. திருக்குறள், 1032, மணிவாசகர் பதிப்பகம், 2009.

துணைநூற்பட்டியல்

1. ஞா. தேவநேயப்பாவானர், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.ஆண்டு.1996.
2. கலித்தொகை, நியுசெஞ்சுரி பதிப்பகம், ப.ஆண்டு.2007.
3. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு.
4. திருக்குறள், 1032, மணிவாசகர் பதிப்பகம், 2009.